**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் விகாரி வருடம் தமிழ் மாதம் பங்குனி 17–ஆம் நாள் ஆங்கில வருடம் 2020 மார்ச்–30 ஆம் தேதி திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்:01**

**கோப்பு எண்.468/2020/எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் உள்ள குடியிருப்புகள், தொழில் நிறுவனங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையம் தினசரி மார்க்கெட் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிறுத்தங்கள், அரசு கட்டிடங்கள் அம்மா உணவகம், மின் மயானப் பகுதி, அரசு மருத்துவமனை வளாகம், பஸ் டிப்போ, தனியார் மருத்துவமனை வளாகப்பகுதிகள், திருமண மண்டப பகுதிகள், பள்ளி கூடங்கள் , கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் உள்ள பகுதிகளில் ஆகியவற்றில் கொரானா வைரஸ் பரவுவதை தடுக்கும் பொருட்டு நகராட்சியின் மூலம் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய நோட்டீஸ்கள், பேனர்கள், ஆட்டோ விளம்பரம், கிருமிநாசினி (Sanitation liquid), கைகளை சுத்தம் செய்திட பக்கெட்டுகள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் வாங்கிடவும் சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு லைசால் 5 % எனும் கிருமிநாசினியை பயன்படுத்தி தொற்று நீக்கம் செய்ய தேவையான லைசால் 5 % 200 லிட்டர் பொது சுகாதார அவசர அவசியம் கருதி வாங்கி தர ஆவண செய்திட ஆணையரின் ஒப்புதலுக்காகவும் அதற்கான கிருமி நாசினிகள் கை தெளிப்பான்கள் பவர் ஸ்பிரே இயந்திரங்கள் வாங்கவும் மன்றத்தின் அனுமதி வழங்கலாம்.
உத்தேச செலவினம் 9.00 லட்சம்

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று கிருமி நாசினிகள் வாங்கிடவும் அதற்கான தொகையை பொதுநிதியில் வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1558 . நாள்.30.03.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:02**

**கோப்புஎண்.2072/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த இறைச்சி கடைகள் மற்றும் பூக்கடைகளின் குத்தகை காலம் 31.03.2020 உடன் முடிவடைகிறது. எனவே கீழ்கண்ட கடைகளுக்கு நடப்பு குத்தகை தொகையுடன் 15% உயர்வு செய்து குத்தகை காலத்தை 01.04.2020 முதல் 31.03.2023 வரை காலநீட்டிப்பு செய்து புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் | குத்தகை இனம் | உரிமைக் காலம் | ஏற்கனவே உள்ள வாடகை | 15% உயர்வு செய்யப்பட்ட தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | லியாகத் அலி– கடை எண் 1 | தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த | 01.04.2020 | ரூ.5500/– | ரூ.825/– | ரூ.6325/ |
| 2. | மாரியப்பன்– கடை எண் 2 | | | | | |
| 3 | பழனிசாமி– கடை எண் 6 &7 | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | செல்வராஜ்– கடை எண் 8 | இறைச்சி கடைகள் | முதல் 31.03.2023 வரை | | | – |
| 5 | D.சுப்பிரமணியம்– கடை எண் 9 & 10 | | | | | |
| 1 | தவமணி– பூக்கடை எண்–2 | பூக்கடை | | ரூ.5500/– | ரூ.825/– | ரூ.6325/– |

**அலுவலகக்குறிப்பு**

மொத்தம் 8 கடைகளின் அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள 15% உயர்த்தப்பட்ட வாடகை தொகையுடன் கடை உரிமம் புதுப்பித்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1559 . நாள்.30.03.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:03**

**கோப்புஎண்.2072/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட் வடக்கு மற்றும் தெற்கு பார்த்த கடைகளின் குத்தகை காலம் 31.03.2020 உடன் முடிவடைகிறது. எனவே கீழ்கண்ட கடைகளுக்கு நடப்பு குத்தகை தொகையுடன் 15% உயர்வு செய்து குத்தகை காலத்தை 01.04.2020 முதல் 31.03.2023 வரை காலநீட்டிப்பு செய்து புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் | குத்தகை இனம் | உரிமைக் காலம் | ஏற்கனவே உள்ள வாடகை | 15% உயர்வு செய்யப்பட்ட தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | P.குமார்–கடை எண் 1 & 2 | தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த கடைகள் | 01.04.2020 முதல் 31.03.2023 வரை | ரூ.6000/– | ரூ.900/– | ரூ.6900/– |
| 2 | கோபால்– கடை எண் 4 | | | | | |
| 3 | சிவக்குமார்– கடை எண் 6 | | | | | |
| 4 | சுமதி–கடை எண் 8 | | | | | |
| 5 | ஆறுமுகம்–கடை எண்–13&14 | | | | | |
| 6 | சுந்தரம்–கடைஎண் 15 | | | | | |
| 7 | பழனிசாமி– கடைஎண் 16 | | | | | |
| 8 | A.துரைசாமி–கடைஎண் 19 | | | | | |
| 9 | துரைசாமி–கடைஎண் 20 &21 | | | | | |
| 1 | வெங்கடாசலம்– கடைஎண்4 | தினசரி மார்க்கெட் | | ரூ.8100/– | ரூ.1215/– | ரூ.9315/– |
| 2 | v.p.ரமேஷ்– கடைஎண் 1 | | | ரூ.8000/– | ரூ.1200/– | ரூ.9200/– |
| 3 | K.பாஷா– கடைஎண்2 | | | | | |
| 4 | K.ஜாபர் மைதீன்– கடைஎண்3 | | | | | |
| 5 | பூபதி– கடைஎண் 5 | | | | | |
| 6 | விஸ்வநாதன்– கடைஎண் 7 | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | S.சுந்தரம்– கடைஎண் 8 | தெற்கு பார்த்த கடைகள் | 01.04.2020 முதல் 31.03.2023 வரை | | | |
| 8 | T.அமுதா– கடைஎண் 9 | | | | | |
| 9 | வனஜா – கடைஎண் 10 | | | | | |
| 10 | A.துரைசாமி– கடைஎண் 11&12 | | | | | |
| 11 | S.சண்முகம்– கடைஎண் 20 | | | | | |
| 12 | குணசேகரன்– கடைஎண் 21 | | | | | |
| 13 | குணசேகரன்– கடைஎண் 22 | | | | | |
| 14 | திலீப்– கடைஎண் 23 & 24 | | | | | |
| 15 | நாகராஜன்– கடை எண் 25 | | | | | |

**அலுவலகக்குறிப்பு**

மொத்தம் 29 கடைகளின் அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள 15% உயர்த்தப்பட்ட வாடகை தொகையுடன் கடை உரிமம் புதுப்பித்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1560 . நாள்.30.03.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:04**

**கோப்புஎண்.2072/2016/அ2**

காங்கயம் நகாட்சிக்குசொந்தமான தினசரி மார்க்கெட் வடக்கு மற்றும் தெற்கு பார்த்த கடைகள் மற்றும் சென்னிமலை ரோடு பூக்கடைகளின் குத்தகைகாலம் 31.03.2020 உடன் முடிவடைகிறது. மேலும் கீழ்கண்டபடி கடையின் குத்தகைதாரர்கள் கடையினை புதுபிக்க விருப்பம் இல்லை என விண்ணப்பம் அளித்துள்ளனர். எனவே கீழ்கண்ட கடைகளை பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

| வ.எண் | குத்தகைதாரின் பெயர் | குத்தகை இனம் |
|---|---|---|
| 1 | அஸ்கர் கவாஸ்கர் | தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த கடை எண் 3 |
| 2 | அமுதா | தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த கடை எண் 17 |
| 3 | செல்லக்கண்ணு | தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த கடை எண் 18 |
| 4 | K.திருப்பதிசாமி | தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை எண் 14 & 15 |
| 5 | அப்துல் சமது | தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை எண் 18 |
| 6 | ரவி | சென்னிமலை ரோடு பூக்கடை எண் 1 |

**அலுவலகக் குறிப்பு**

கடை நடத்தி வந்த குத்தகைதாரர்கள் கடை தேவையில்லை என கூறியுள்ள படியால் இதனை பொது ஏலத்தில் விடமன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1561 . நாள்.30.03.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:05**

**கோப்பு எண் : 193/2020/இ1**

காங்கயம் நகராட்சியில் பொதுநிதி 2019–20 ன் கீழ் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பூர் நகராட்சிகள் மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு உபகரணங்கள் விநியோகம் செய்யும் பணிக்காக 21.02.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. ஸ்பைடர் டெக்னாலஜி மதிப்பீட்டை விட -0.10 % குறைவு
2. ராஜ் கம்ப்யூட்டர்ஸ் மதிப்பீட்டை விட +0.25 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஸ்பைடர் டெக்னாலஜி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1562 . நாள்.30.03.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:06**

**கோப்பு எண் : 0027/2020/இ1**

காங்கயம் நகராட்சியில் பொதுநிதி 2019–20 ன் கீழ் ரூ.1.75 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு 17 கார்த்திகை நகர் விநாயகர் கோவில் அருகில் வடிகால் அமைத்தல் பணிக்காக 21.02.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எஸ். சுப்பையா மதிப்பீட்டை விட +4.90 % அதிகம்
2. ஆர். வடிவேல் மதிப்பீட்டை விட +6.50 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு. எஸ். சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1563 . நாள்.30.03.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:07**

**ந.க எண் 857/2019/எப்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட ரீ.சர்வே எண் 840/1 A 3 என்ற பகுதியில் 1.32 1/2 ஏக்கர் மனைப்பிரிவு அனுமதி கோரியது உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க எண் 951/2019/திம–1 நாள் 22.08.2019 பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகள் காங்கயம் நகராட்சிக்கும் மற்றும் ஒதுக்கப்பட வேண்டிய மின் பகிர்மான இடத்தை கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் பல்லடம் அவர்களுக்கு ஒப்படைக்கவும் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி மனைப்பிரிவில் அபிவிருத்தி பணிகள் மேற்கொண்டு பொறியாளரால் சான்று வழங்க அறிவுறுத்தப்பட்டதில் , இந்நகராட்சி பொறியாளரால் குறிப்பில் மேற்படி மனைப்பிரிவில் அமைக்கப்பட்ட தார்சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்றவாறு உள்ளதாகவும் மேலும் அடிப்படை வசதிகள் மழைநீர் வடிகால் பயன்பாட்டிற்கு ஏற்றதாகவும் தெருவிளக்குகள் அமைக்க ரூ.2,20,000/– ஐ இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தவும் தெரிவிக்கப்பட்டது. ஏனவே மேற்படி மனைப்பிரிவில் திருப்பூர் நகர் ஊரமைப்பு துறையில் மனைப்பிரிவு வரைபடம் ஒப்புதல் வழங்க உத்தேச வரைபடத்தில் மனைப்பிரிவு சாலைகளின் மொத்த பரப்பு 1070.60 சதுர மீட்டர் மற்றும் ஒதுக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு 27.87 சதுர மீட்டர் இடத்தை நகராட்சிக்கு தானமாக பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகளின் பரப்பு 1070.60 சதுர மீட்டர் மற்றும் ஒதுக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு 27.87 சதுர மீட்டர் இடத்தை நகராட்சிக்கு தானமாக பெற மன்றம் ஏற்கலாம்.

2. மனைப்பிரிவில் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானமாக பெற்றதில் நகராட்சிக்கு உட்பிரிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
3. தெரு விளக்குகள் அமைக்க ரூ.2,20,000/– ஐ இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்த அறிவிப்பு வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1564 . நாள்.30.03.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:08**

**கோப்புஎண்.756/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான ஆடடிக்கும் தொட்டி குத்தகை உரிமத்திற்கு குத்தகை காலம் 31.03.2020 உடன் முடிவடைகிறது. எனவேநடப்பு குத்தகை தொகையுடன் 5% உயர்வு செய்து குத்தகை காலத்தை 01.04.2020 முதல் 31.03.2021 வரை காலநீட்டிப்பு செய்து புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் | குத்தகை இனம் | உரிமைக் காலம் | ஏற்கனவே உள்ள வாடகை | 15% உயர்வு செய்யப்பட்ட தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | அப்துல் சமது | ஆடடிக்கும் தொட்டி | 01.04.2020 முதல் 31.03.2021 வரை | ரூ.46,500/– | ரூ.2325/– | ரூ.48,825/– |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1565 . நாள்.30.03.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:09**

**கோப்புஎண்.755/2016/அ2**

காங்கயம் நகாட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையக் கடை எண்.15,27 மற்றும் 28–க்கு 12.03.2020 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கடை எண்.15 க்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | ஏலம் கோரியவர்கள்விபரம் | பழைய பேருந்து நிலையக் கடை எண்கள் | ஒப்பந்துபுள்ளிதொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வஜ்ரவேல்,<br>சின்ன பரஞ்சேர் வழி, காங்கயம். | கடைஎண்–15 | ரூ.6500/– |

மேற்கண்டவாறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கடை எண் 15–க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக திரு.வஜ்ரவேல் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி கடை இது வரை 6 தடவை ஏலம் விடப்பட்டு ஏலம் போகாத காரணத்தினால் நகராட்சிக்கு வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி ஏலத் தொகையினை ஏற்று கடையினை வாடகைக்கு விட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1566 . நாள்.30.03.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:10**

**கோப்பு எண். 727 / 2018 / எப்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நகரமைப்பு பிரிவு பணியை சார்ந்த கட்டிட உரிமக் கட்டணங்கள், மனை ஒப்புதல் மற்றும் இதர கட்டணங்கள் ஆகியவற்றை நகராட்சி நிதிநிலைமையை கருத்தில் கொண்டும், அதிகரித்து வரும் செலவினங்களை கருத்தில் கொண்டும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 05.03.2019 –ந் தேதிய 31159/2018/டிபி3–ன் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்படி விதி 14–ல் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் எனவும் மற்றும் ஒருமுறை கால நீட்டிப்பு காலம் மூன்றாண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டதன் அடிப்படையிலும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ன்படியும் கட்டண விகிதங்கள் மாற்றி அமைக்க இந்நகராட்சி மன்றத் தீர்மானம் எண் 1201/2019, நாள் 07.03.2019 –ன் படி அனுமதிக்கப்பட்டு 01.04.2019 முதல் திருத்தி அமைக்கப்பட்ட கட்டணத்திற்கு ஆட்சேபனை மற்றும் ஆலோசனை இருப்பின், இவ்வறிப்பு கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் தெரிவிக்க கோரி பொதுமக்களுக்கு மாலை முரசு மற்றும் மாலை மலர் ஆகிய தினசரி நாளிதழ்களில் 11.01.2020 –ல் விளம்பரம் வெளியீடு செய்யப்பட்டும் பொதுமக்கள் பார்வைக்கு விளம்பரப் பலகையில் வெளியிடப்பட்டும் நாளது தேதி வரை எவ்வித புகார்கள் மற்றும் ஆட்சேபனை, ஆலோசனைகள் இவ்வலுவகத்திற்கு வரப்பெறவில்லை. எனவே மேற்படி மன்றத்தீர்மானம் எண் 1201/2019, நாள் 07.03.2019–ல் அனுமதிக்கப்பட்ட திருத்திய கட்டிட உரிமக் கட்டணங்களை ஊர்ஜிதம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) திருத்திய கட்டண அட்டவணையை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம். இதற்கு ஆகும் செலவினத்தை பொதுநிதியில் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1567 . நாள்.30.03.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:11**

**ந.க.எண் : 358/2013/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு 12.03.2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் எவரும் ஏலம் கேட்க முன்வரவில்லை, எனவே மறுஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | ஏலம் விடப்பட வேண்டிய கடைகள் | கடை எண்கள் |
|---|---|---|
| 1. | தாட்கோ வணிக வளாகக் கடை எண் | 2,3,5 மற்றும் 6 |
| 2 | பழையப்பேருந்து நிலையக் கடை எண்கள் | 27 மற்றும் 28 |
| 3 | தினசரி மார்க்கெட் வடக்குப் பார்த்த கடை எண் | 11 |
| 4 | தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை எண் | 6 |
| 5 | சென்னிமலை ரோடு பூக்கடை எண் | 3 |

<u>அலுவலகக் குறிப்பு:–</u>

31.03.2020 அன்று மறுஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1568 . நாள்.30.03.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:12**

**கோப்பு எண். 1743/ 2019 / எப்1**

காங்கயம் வட்டாட்சியர் அவர்களின் கடித ந.க எண் 6242/2018/அ6, நாள் 22.01.2020, பார்வையில் காணும் வட்டாட்சியர் அவர்களின் கடிதத்தில் திருப்பூர் மாவட்டம் காங்கயம் வட்டம், காங்கயம் கிராமம் நத்தம் புல எண் 1057/9 புலத்தில் 0.03. 43 ஹெக்டர் அளவுள்ள புலத்திற்கு நத்தம் பற்றி வழங்கக் கோரி தம்பண கவுண்டர் என்பவர் அளித்துள்ள மனு தொடர்பாக தம்பண கவுண்டர், வசந்தா தேவி, ரத்தினசாமி, சாமிநாதன், பொன்னம்மாள், ராமசாமி, செல்வராஜ், நடராஜ், மணி ஆகிய ஒன்பது நபர்களுக்கு நத்தம் பட்டா வழங்க நகராட்சியின் மூலம் தீர்மானம் நிறைவேற்றி வழங்க புல வரைபடத்தில் குறிப்பிட்டு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் பட்டா வழங்க காங்கயம் நகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லாததால் தீர்மானம் நிறைவேற்றி வட்டாட்சியர்க்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்ற தீர்மான எண்.1569 . நாள்.30.03.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்)XXXXX
திரு.பு.பொன்னம்பலம்
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி